**O.S. 174 of 2021**

Date : 27.01.2026.

வா.சா.1 : **லெட்சுமணன்**

வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்

பிரதிவாதி வழங்கியதாக சொல்லப்படும் காசோலை எந்த தேதியில் கொடுத்தார் என்றால் 05.07.2021 ம் தேதி அன்று கொடுத்தார். அந்த காசோலையில் எந்த தேதி சொல்லப்பட்டிருந்தது என்றால் 05.07.2021 போடப்பட்டிருந்தது. காசோலையில் குறிப்பிடப்பட்டிருந்த தேதியில்தான் என்னிடம் காசோலை கொடுத்தாரா என்றால் ஆமாம். கசோலை கொடுப்பதற்கு முன்பு என்னிடம் தகவல் ஏதும் சொல்லியிருந்தாரா என்றால் பணம் வாங்க வருகிறேன் என்று தகவல் சொல்லி வந்தார். எந்த தேதியில் பணம் வாங்க வருகிறேன் என்று தகவல் சொன்னார் என்றால் 02.06.2019 அன்று சொன்னார். அவர் கடன் கேட்டதாக சொல்லும் கடன் தொகையை நான்சாதாரணமாக வீட்டில் வைத்திருந்தேனா என்றால் விவசாயம் செய்து வைத்திருந்தேன். பிரதிவாதி என்ன வேலை பார்ப்பதாக சொன்னார் என்றால் ஆசிரியர் வேலை பார்ப்பதாக சொன்னார். பிரதிவாதியை எப்படி எனக்கு தெரியும் என்றால் குடும்ப நண்பராக 10 வருடங்களாக பழக்கம். பிரதிவாதி வீட்டில் எத்தனை நபர்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் பிரதிவாதி எந்த பள்ளியில் பணிபுரிந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நியாபகம் இல்லை. பிரதிவாதிக்கு மாத வருமானம் எவ்வளவு என்றால் எனக்கு நியாபகம் இல்லை. கடன் கொடுத்ததாக சொல்லக்கூடிய கால கட்டத்தில் பிரதிவாதியின் நிதி நிலைமை மற்றும் வேறு யாருக்காவது கடன் கொடுக்க வேண்டுமா என்றும் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் மீது வேறு எந்த நீதிமன்றத்திலாவது வழக்கு நிலுவையில் உள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான்குநேரி JM நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து அது முடிந்துவிட்டது. அதில் அவர் 6 மாதத்தில் பணம் தரவேண்டும் என்று கூறியிருந்தார்கள். அந்த வழக்கை நான்தான் போட்டேன். அந்த வழக்கின் காசோலையும், இந்த வழக்கின் காசோலையும், ஒரே கால கட்டத்தில் கொடுத்ததா என்றால் ஒரே காசோலைதான் முதலில் JM நீதிமன்றத்தில் போட்டேன். பணம் தராமல் இருந்ததால் சொத்தை ஜப்தி செய்த இந்த

நீதிமன்றத்தில் வழக்கு போட்டேன். வள்ளியூரில் சிதம்பரம் என்பவர் பிரதிவாதி மேல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. எனக்கு சிதம்பரம் என்ற பெயரில் உறவினர்கள் இல்லை. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லப்படும் தேதியில் நான் மட்டும்தான் இருந்தேன். நான் கடன் கொடுத்துவிட்டு பிரதிவாதியிடம் இருந்து காசோலை தவிர நானாக வேறு ஆவணங்கள் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. கடன் வாங்க வாங்கியதாக சொல்லப்படும் சமயத்தில் பிரதிவாதியுடன் வேறு யாரும் வந்தார்களா என்றால் வரவில்லை. என் வீட்டிற்கு வரும் போதே காசோலை நிரப்பி வைத்திருந்தார்கள். காசோலை நிரப்பி வைத்திருப்பதில் அதில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் பிரதிவாதியினுடையது ஆகும். என்ன செலவுக்காக பணம் வேண்டும் என்று பிரதிவாதி கேட்டார் என்றால் குடும்ப செலவுக்கு பணம் வேண்டும் என்று கேட்டார். நான் கடன் கொடுத்ததாக சொல்லக்கூடிய தொகை எவ்வளவு நாட்களாக என் கைவசம் இருந்தது என்றால் 4, 5 மாதங்களாக இருந்தது. அந்த தொகை எவ்வாறு கிடைத்தது என்றால் விவசாயம் செய்து கிடைத்தது. விவசாய நிலம் எனக்கு சொந்தமாக இருப்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சம்ந்தமில்லாததால் நான் தாக்கல் செய்யவில்லை. விவசாயம் நான் செய்து வருகிறேன் என்பதற்கு விவசாய அட்டைகள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் விவசாய அட்டை என்னிடம் உள்ளது. பட்டா எல்லாம் என் அப்பா பெயரில் உள்ள. என் பெயரில் விவசாய நிலங்கள் இல்லை என்றாலும் நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. ரூ.9 லட்சம் கடன் கொடுத்ததாக சொல்வதில் அதை நான் ரொக்கமாக கொடுத்தேனா என்றால் ரொக்கமாகத்தான் கொடுத்தேன். ரூ.2 லட்சத்திற்கு மேல் பரிவர்த்தனை செய்யும் போது ரொக்கமாக கொடுக்க கூடாது என்பதும், ஆவணங்கள் வழியாக பரிமாற்றம் செய்யவேண்டும் என்பதும் எனக்கு தெரியும் என்றால் அப்படி எதுவும் எனக்கு தெரியாது. கடன் கொடுக்கும் போது கூடுதல் பாதுகாப்பிற்காக புரோ நோட்டு அடமான பத்திரம் அசல் பத்திரம் ஆகியவற்றை வாங்கி வைக்கவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் நான் வட்டிக்கு கொடுக்கவில்லை. கைமாற்றாகத்தான் கொடுத்தேன். கூடுதல் ஆவணங்கள் வாங்காமல் ரூ.9 லட்சம் கடன் கொடுத்தாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் விவசாயத்திற்கு வருமான வரி இல்லை. என்னிடம் பான் கார்டு உள்ளது. வருடந்தோறும் Annual return ஐ தாக்கல் செய்கிறேனா

என்றால் இல்லை. ரூ-9 லட்சம் கடன் கொடுத்தாக சொல்வது பொய் என்றாலும் அவ்வாறு கொடுத்திருந்தால் Annual return ல் தெரியப்படுத்தியிருப்பேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த காசோலையை எந்த தேதியில் வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால் 05.07.2019 ல் தாக்கல் செய்தேன். எனக்கு எந்த வங்கியில் வங்கி கணக்கு உள்ளது என்றால் கனரா வங்கி மற்றும் பேங்க் ஆஃப் இந்தியா ஆகிய வங்கிகளில் கணக்கு உள்ளது. கடன் கொடுத்தாக சொல்லக்கூடிய காலக்கட்டத்தில் எனது வங்கி கணக்கில் ரூ.10 லட்சம் இருந்தது. பிரதிவாதிக்கு நான் கேட்பு அறிவிப்பு எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் 15.07.2019 ல் அனுப்பினேன். அந்த சமயத்தில் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதில் பொய்யான தகவலுடன் அனுப்பினார். என்னுடைய காசோலை என்ன காரணத்தினால் திரும்ப வந்தது என்றால் பிரதிவாதியின் அக்கவுண்டில் பணம் இல்லை என்று திரும்ப வந்தது. Stop payment என்ற வாசகம் இருந்ததா என்றால் அவ்வாறு தெரியவில்லை. பணம் இல்லை என்று வங்கியில் சொன்னார்கள். பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரர் பெயர் தெரியுமா என்றால் ஆல்வின் என்பதாகும். பிரதிவாதியின் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 3 பேர் என்று சொன்னார்கள். பிரதிவாதிக்கு சார்லஸ் என்ற சகோதரர் உண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சார்லஸ் நான்குநேரி பக்கத்தில் ஒரு பிளாட் வாங்குவதற்காக என்னிடம் கடன் கேட்டார் என்றால் அவ்வாறு வாங்கவில்லை. சார்லஸ் என்பவரை எனக்கு தெரியாது. என் பெயரில் நான்குநேரி பக்கத்தில் பிளாட் பதிவு செய்துள்ளேனா என்றால் இடம் வாங்கியுள்ளேன். அந்த பிளாட் வாங்கும் போது சார்லஸ் எவ்வளவு கொடுத்தார் என்றால் அவரை எனக்கு தெரியாது. நான் எவ்வளவு ரூபாய் கிரைய தொகை கொடுத்தேன் என்றால் நான் இரண்டு , மூன்று இடம் வாங்கியுள்ளதால் எந்த இடம் என்று சொன்னால் என்னால் சொல்ல முடியும். சர்வே எண்-7/1A1 ற்கான கிரைய தொகை என்ன என்றால் நான் அதை நான்குநேரியில் வாங்கவில்லை. வள்ளியூரில் வாங்கியுள்ளேன். அந்த பிளாட் தற்போது என் கைவசம் இல்லை. நான் பிரதிவாதி ஜெயந்தி விருப்பப்பட்டு கேட்டதால் கொடுத்தேன். பிரதிவாதிக்கு எப்போது விலைக்கு கொடுத்தேன் என்றால் அது வருட கணக்கு ஆவதால் எனக்கு நியாபகம் இல்லை. எவ்வளவு ரூபாய்க்கு கொடுத்தேன் என்றால் நியாபகம் இல்லை. காசோலை கடன் கொடுத்தாக சொல்லப்படும் தேதிக்கு முன்பாகவே கிரையம் கொடுத்தேன். மேற்படி பிளாட் வாங்குவதற்கு சார்லஸ் என்பவர் ரூ.3 லட்சம் கடன் வாங்கியிருந்தார் என்றால்

சரியல்ல. கிரைய பத்திரத்தை என் பெயரில் பதிந்தால்தான் கடன் தருவதாக சார்லசிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. சார்லஸ் ரூ. 2 லட்சம் என்னிடம் கொடுத்தார் என்றும் மீதத்தொகையை நான் ஏற்பாடு செய்து அந்த பிளாட்டினை என் பெயரில் பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்த தொகைக்கு சார்லஸ் எனக்கு அதிகபட்சமாக வட்டி அளித்தார் என்றால் சரியல்ல. சார்லஸ் கடன் வாங்கும் போது அவரின் சகோதரியின் காசோலையை என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. என்னிடம் வாங்கிய கடனை சார்லஸ் அடைத்த பின்பு மேற்படி பிளாட்டை நான் பிரதிவாதியின் பேரில் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் கொடுத்த காசோலையை நான் திருப்பி கொடுக்காமல் அதை தவறாக பயன்படுத்தி வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இதில் ஒரு காசோலையை எனது உறவினர் சிதம்பரம் மூலமாக வள்ளியூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஒரே காலக்கட்டத்தில் என்னிடம் கடனும் வாங்கினார்கள் என்றும் பிளாட்டும் வாங்கினார் என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடன் வாங்குவதற்கு முன்பே பிளாட்டை விற்றுவிட்டேன். கடனுக்கும் பிளாட்டிற்கும் சம்மந்தம் இல்லை. எனக்கு ரூ.9 லட்சம் கடன் கொடுப்பதற்கு நிதி ஆதாரம் இல்லை என்றால் சரியல்ல. ரூ.9 லட்சம் கடன் கொடுத்ததாக சொல்வதற்கு Annual return தாக்கல் செய்யாததால் அது சட்டப்படியான கடன் என்ற வரையறைக்குள் அடங்காது என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் எந்த காலத்திலும் கடன் வாங்கியது இல்லை என்றும் காசோலையும் நேரடியாக கொடுக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சார்லஸிடம் கந்து வட்டி வசூலித்து கடனை திருப்பி வாங்கி கொண்டேன் என்றும் காசோலையை கொடுக்காமல் ஏமாற்றிவிட்டேன் என்றால் சரியல்ல. என் மீது பிரதிவாதி கந்துவட்டி புகார் கொடுத்ததில் நான் விசாரணைக்கு சென்றேனா என்றால் வள்ளியூர் காவல் நிலையத்திற்கு சென்றேன். அது பொய்யான தகவல் ஆகும். அவர்கள் நீதிமன்றத்திற்கு செல்லுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். எனது வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.